# Sri Rangam Temple Rituals

காலை படைக்கப்படும் பிரஸாதத்திற்குப் பொங்கல் என்று பெயர். இரவு படைக்கப் படுவது செலவுச் சம்பா. அடைக்காய் என்பது வெற்றிலைப் பாக்கு. அங்கில் என்பது பெருமாள், நாச்சியார் முதலானோர்க்குச் சாத்தும் கவசம்; அமுஞ்சி என்பது கூலி இல்லாத வேலை; அரிவாணம் என்பது தாம்பூலத் தட்டு; அனுப்படி என்பது கோயில் கணக்கில் முன் பக்கத்துத் தொகையை மறுபக்கத்தில் கூட்டி மொத்தம் கூட்டுவது; ஆண்டாள் என்பது வாஹனத்தில் கடவுளரின் ஆடைகளை ஒன்று சேர்த்துத் தைப்பதற்குப் பயன்படும் ஊசி; இராமானுசன் என்பது தீபாராதனத் தட்டுக்குப் பெயர்; எரிதுரும்பு என்பது விறகு; ஒற்றை வெளியாடை என்பது அரங்கனுக்கு வெய்யில் படாமல் பிடிக்கும் மறைவு; பணிப்போர் என்பது செய்த பொருளில் வேலைக்குக் கூலியாக ஒரு பாகம்; பலகை மாதலம் என்பது சமையல்காரர் கூலியில் ஒரு பாகம்; பன்னாங்கு என்பது பல்லக்கின் மேல்விரிப்பு; போர்ப்படி என்பது சந்தனம் கலந்ததற்குக் கூலியாக சந்தனத்திலேயே ஒரு சிறு பாகம்; சக்ரவர்த்தியம் என்பது சில சமயங்களில் ஊதும் வாத்திய வகை; கூட்டு வெளியாடை என்பது பெருமாள்மேல் வெயில் மழை படாமல் பிடிக்கும் கொட்டகை போன்ற மறைப்பு; வகைச்சல் என்பது பெரிய மாலையுடன் சேர்த்துத் தரிக்க வேண்டிய சிறு மாலை

அரசர்களும், அர்ச்சகர்களும், ஸ்தலத்தார்களும், ஆர்வமுடன் பக்த மக்களும் பேணிக்காத்த ஸ்ரீரங்கம் கண்ணுக்கு எட்டாத மறைபொருள் கடவுள் என்பதற்கு மாற்றாக, கண்காண நின்று கைவைத்து உறங்குவான்போல் யோகு செய்து உள்ளம் கொள்ளைகொள்ளும் கள்வனாய், 'நம்பெருமாள்' என்று வாய்நிறைய, உளம்பொங்க கூப்பிடலாம்படியான அரங்கனைக் காட்டியதில், ஆழ்வார்களும் அருள்தோய்ந்த நெஞ்சினரும், அகம்புக்கக் காதல் பெருக்காய், 'அரங்கமாளி என்னாளி' என்று ஈடுபட்டுப் பெருகிய அன்புப்பெருக்கில் திவ்யபிரபந்தங்கள் தோன்றின. நாதமுனிகள் காலம் தொட்டு, இந்தப் பக்திப் பெருக்கிற்கு தத்துவக் கரைகள் கட்டி நிலைபெறச் செய்யவேண்டும் என்ற எண்ணமும், ஸ்ரீரங்கத்தை ஸ்ரீவைஷ்ணவ இயக்கத்தின் ராஜதானியாக ஆக்கவேண்டும் என்ற ஆர்வமும் எழுந்தன. ஆளவந்தார் காலத்தில் அதற்கான அடிப்படைகள் தெளிவாகி, ஸ்ரீராமானுஜர் காலத்தில் முழுநிறைவு அடைந்தது. ஸ்ரீராமானுஜர் ஸ்ரீபாஷ்யம் என்ற வேதாந்த விரிவுரையும், மற்ற நூல்களும் எழுதி பக்திக்குத் தத்துவக் கரைகள் எழுப்பினார் எனலாம். பொதுமக்கள் தங்கள் பேசுமொழியில் அருள்கனிந்த ஈடுபாட்டை வெளிப்படுத்துவதை ஆதரிக்கும் பாஞ்சராத்திர ஆகம முறைப்படி ஸ்ரீரங்கத்தை நெறிப்படுத்தியும், பெரிய கோயிலை நிர்வகிக்கக் கோயில் பணிகளைப் பத்துத் தொகுதிகளாகப் பிரித்து அதற்குரிய தொண்டர்களை ஏற்படுத்தியும், கோயிலில் பக்திகொண்ட பொதுமக்கள் பலவிதத்திலும் பங்கேற்கும்படிச் செய்தும் ஸ்ரீரங்கத்தை முன்னிலும் மிகவிளங்க ஸ்ரீவைஷ்ணவ உலகத்தின் தலைநகரம் ஆக்கினார் என்றே சொல்லவேண்டும். இந்தப் பத்துத் தொகுதிகளுக்கும் 'பத்துக் கொத்து' என்று பெயர். பல்வேறு திவ்ய தேசங்களிலிருந்து ஸ்ரீரங்கம் வந்து ஈடுபடும் திருப்பதியார், கோயில் திருப்பணி செய்யும் திருப்பணியார், திருவாராதனத் தொண்டுகள் புரியும் பாகவத நம்பிமார், திருவாராதனத்தில் உதவியாக இருக்கும் உள்ளூரார், அரங்கன் திருமுன்னர் ஆழ்வார் பாடல்களை ஓதும் அரையர்களான விண்ணப்பம் செய்வார், அரங்கனின் தூநீராடலுக்கும், திருவாராதனத்திற்கும் குடங்களில் தீர்த்தம் எடுத்துவரும் திருக்கரகக் கையார், அரசர்களின் பிரதிநிதிகளாய்ச் செயல்படுவோரான ஸ்தானத்தார், அரங்கன் திருமுன்னர்

வேதங்கள், புராணங்கள், வேதாந்த நூல்கள், ஆழ்வார்களின் இயற்பா பிரபந்தம், பஞ்சாங்கக் குறிப்புகள் போன்றவற்றை விண்ணப்பம் செய்வதற்கும், கீர்த்தனங்களை இசையோடு இசைப்பதற்கும் அமைந்த பட்டாள், கோயில் திருவாசல்களில் காக்கும் பணி பூண்ட ஆர்யபட்டாள், பூத்தொண்டு செய்யும் தாஸநம்பிகள் என்பவர்கள் அந்தப் பத்துக் கொத்தில் அடங்கியவர்கள்.

இவர்களைத் தவிர உழுதொழில் புரியும் தானியங்கள் அளப்பவர், வழிபாட்டிற்குரிய பொருள்களை தொகுத்துச் சேமித்துக் கொடுப்பவர், கோயிற்கதவுகளில் முத்திரை இடுவதற்குரிய களிமண், அரக்கு முதலியன தயாரிப்பவர்கள், தெய்விக நடன மாதர்களான தேவ தாசிகள், சிற்பிகள், கொடிகளுக்கு வர்ணம் தீட்டும் கம்மியர்கள், நகைகளில் பழுதுபார்க்கும் பொற்கொல்லர்கள், பித்தளைப்பாத்திரங்களைச் செய்யும் கன்னார்கள், தையற்காரர்கள், நெசவாளர்கள், தச்சர், சலவையாளர், கோயிலில் சமையல் அறையான திருமடைப்பள்ளியில் அன்றாடம் பயன்படுத்தி உடைத்துவிடவேண்டிய மட்பாண்டங்கள் செய்யும் குயவர், கோயிலுக்கான பொருட்களை அக்கரையினின்றும் கொணர்ந்துவரும் படகோட்டிகள், இசை, நடன வல்லுநர்கள் என்றபடி பொதுமக்களைப் பெருவாரியாகக் கோயிலில் அவரவர்தம் துறைகளுக்கு ஏற்ப ஈடுபடுத்தினார் ஸ்ரீராமானுஜர்.

முகமதியர்களால் கவர்ந்து செல்லப்பட்ட அழகிய மணவாளன் விக்கிரகம் பல வருடங்கள் கழித்து மீட்டுவரப்பட்டபோது அது முதலில் இருந்த அதே விக்கிரகம்தானா என்பதில் எழுந்த ஐயத்தை ஒரு கண் தெரியாத சலவைக்காரர் தனது பழுத்த வயதில் ஓர் உத்தியின் மூலம் தீர்த்துவைத்தார். அதாவது, அந்த விக்கிரகத்தைக் குளிப்பாட்டி அந்த திருக்குளிநீரை ஒரு தூய துணியில் தோய்த்துத் தன் கையில் பிழியுமாறு கூறினார். அதை முகர்ந்துபார்த்து விக்கிரகத்தில் எப்பொழுதும் வீசும் கஸ்தூரிப் பரிமளம் திகழ்வதை உணர்ந்து அதே அழகியமணவாளன்தான் என்று தீர்ப்புக்கூறினார். ஒரு கல்தச்சர், சிற்ப வேலை செய்வதற்காக ஒரு கல்லை உடைத்தவர், அதில் ஒரு குழியும், அதில் ஒரு தேரையும், அந்தத் தேரைக்குத் தேவையான நீரும் இருக்கக் கண்டு, 'ஒரு தேரைக்கு வாழ்வும், வாழ்முதலும் அமைத்த அரங்கன் நிச்சயம் என்னையும் காப்பான்' என்ற உள்ள எழுச்சியும், உறுதியும் பிறந்து, அந்த எண்ணத்திலேயே லயித்தவராய்த் தம் வாழ்நாள் முழுவதும் பேச்சு, இயக்கம் இன்றி நிஷ்டையில் அமர்ந்துவிட்டார். அவருக்கும், அவர் குடும்பத்திற்கும் அரங்கனே தினமும் ஸ்ரீராமானுஜர் கொடுத்தனுப்பினார் என்று கோயில் பிரஸாதங்களைக் கொண்டுபோய்க் கொடுத்துவந்தான். கல்தச்சன் காலமான பின்பு, அவன் மனைவி ஸ்ரீராமானுஜரிடம் எப்பொழுதும்போல் நிறுத்தாமல் பிரஸாதங்களை அனுப்பிவைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டாள். அப்பொழுதுதான் ஸ்ரீராமானுஜருக்கே தெரியவந்தது. 'இனிமேலாவது அரங்கன் சோறு சுமவாமல் இருப்பான்' என்று கூறினார்.

ஒருகாலத்தில் கோயிலை ஆக்ரமிக்க வந்து அக்ரமங்கள் புரிய ஆரம்பித்த துலுக்கப் படைத்தளபதி ஒருவனை கோபுரத்தின் மேல் உல்லாசமாக அழைத்துச் சென்று அவனையும் தள்ளிவிட்டு, ஓர் உயிரைக் கொன்ற பாவத்திற்காகத் தானும் விழுந்து உயிர் துறந்தாள் வெள்ளையம்மாள் என்னும் தேவதாசி. அவள் நினைவாகவே வெள்ளைக் கோபுரம் என்று பெயர் பெற்றது கிழக்குப் பக்கத்துக் கோபுரம்.

முக்தி தரும் மாதவனே முக்திக்காக ஏங்கி இலக்கை அடையும் ஜீவனாக நடித்துக்காட்டும் அதிசயத் திருநாள்தான் ஸ்ரீரங்கத்தில் வைகுண்ட ஏகாதசி என்று பார்த்தோம். அதிசயம் அதோடு முடிந்துவிடவில்லை. மற்றொன்றும் இருக்கிறது. அது என்னவென்றால், உலகின் முதல் குரு அரங்கன். உயிரினம் வாழ, மனிதர் முக்திப்பேறு அடைய சாத்திரங்களைத் தந்ததும் அவன்தான் என்கிறது ஸ்ரீவைஷ்ணவம். அந்த அரங்கனே ஒரு மனித குருவை நாடி ஒருவருட காலம் தானும், பெரிய பிராட்டியாருமாய் வீற்றிருந்து அந்தக் குரு விரித்துரைக்கும் திருவாய்மொழிக்கான ஈடு வியாக்கியானத்தைச் செவியாரக் கேட்டு, நிறைவு பெறும் நாளன்று அவர்மீது ஒரு வாழ்த்துப்பா பாடினான். 'ஸ்ரீசைலேச தயாபாத்ரம்' என்று தொடங்கும் அதுவே இன்று விஷ்ணு கோயில்களில் ஆழ்வார் பாடல்களை ஓதத் துவங்குமுன் தொடக்கப்பாவாகத் திகழ்கிறது என்பது எவ்வளவு அதிசயம்! அதுமட்டுமா? ஒருசீடன் தன்னுடைய குரு இவ்வுலக வாழ்வு முடிந்து இறைவனடி எய்திய நாளை ஆண்டுதோறும் நினைவுகூர்ந்து வழிபாடு இயற்றலாகிய சடங்குகள் செய்தல்போல் அரங்கனும் தன் குருவாகிய ஸ்ரீமணவாளமாமுனிகளுடைய நினைவாக அவர் பரமபதம் எய்திய நாளில் தன் தொண்டர்களிடமிருந்து பொருள் திரட்டி அவருடைய அத்யயனத்தை நடத்திவருகிறான் என்பது பேரதிசயமில்லையா? இங்கு ஈடு என்பது திருவாய்மொழிக்கான நம்பிள்ளையின் விரிவுரைக்குப் பெயர். அவருடைய விளக்கவுரையைக் கேட்டு அதை உள்ளபடியே பதிந்துவைத்தவர் வடக்குத் திருவீதிப்பிள்ளை. நம்பிள்ளையின் உத்தரவால் ஈடு நெடுநாள் பிரசாரத்திலேயே இல்லாமல் மறைந்திருந்தது. அதை வெளியுலகு அறியச் செய்தது ஸ்ரீமணவாளமாமுனிகளுக்கு அரங்கன் இட்ட அருளப்பாடு. ஒருவருடம் தொடர்ந்து அரங்கனும் எல்லா உற்சவங்களையும் நிறுத்திவைத்துவிட்டுத் திருவாய்மொழி காலக்ஷேபம் கேட்டிருக்கிறான்.

உயிர்கள், புறப்பொருட்கள் ஆகிய அனைத்தினுள்ளும் 'உடல்மிசை உயிரென கரந்து எங்கும் பரந்துளன்' என்ற விசிஷ்டாத்வைத தத்துவத்தையும், இறையருள் நிழலில் அனைவருக்கும் புகலிடம் என்ற ஆகமக் கருத்தையும் ஒருங்கே விளக்கும் இடமாய்த் திகழும் ஸ்ரீரங்கம் வரலாற்றில் பல இடையூறுகளைத் தாண்டி வந்துகொண்டிருக்கிறது. மூவேந்தர் போர்களில் கோயில் மதிள்களைச் சுற்றி முற்றுகைப் போர் நடந்திருக்கிறது. முகமதிய அரசர்களின் படையெடுப்பின்போது பல இடைஞ்சல்களைக் கோயில் அடைந்திருக்கிறது. ஆங்கிலப் படையெடுப்புகளின் போதும், பிரெஞ்சுப் படையெடுப்புகளின் போதும் பல துயரங்களை அடைந்திருக்கிறது. கோயில் பரிஜனங்களும், ஸ்ரீரங்கத்து மக்களும் சொல்லொணா வேதனைகள் அடைந்திருக்கின்றனர். அவற்றையெல்லாம் மீறி, சாதி, இனம், ஆண், பெண், சிறுவர், முதியோர் என்ற வேறுபாடின்றி எல்லோருக்கும் ரங்கன் தங்கள் வீட்டைச் சேர்ந்தவன். தாங்கள் அனைவரும் சேர்ந்து ஸ்ரீரங்கம் என்ற பெரிய குடும்பத்தில் இருப்பதாகத்தான் அனைவர் மனத்திலும் எண்ணம். ஸ்ரீரங்கத்து மக்கள் தத்துவத் தேர்ச்சி மிக்கவர்கள். கலை நயம் தெரிந்தவர்கள். என்றும் நிகழும் கவிதையாக அரங்கனின் விழாக்களைக் கண்டு ஊக்கம் கொள்பவர்கள். என்றும் உலராக் கவிதையாக ஆழ்வார்களின் பாடல்களைக் கேட்டு அரங்கனிடம் தோய்பவர்கள். ஸ்ரீரங்கம் தெருக்கள் கலைதெரி மன்றங்களாய்த் திகழ்ந்து வந்திருக்கின்றன. ஸ்ரீரங்கத்துத் தெருக்களில் விளையாடிய சிறுவர்கள் பெருமாள் விளையாட்டு விளையாடிய பொழுது, ஒரு சிறுவன் ஒரு கொட்டாங்கச்சியில் மணலை வைத்துக்கொண்டு, தெருவோடு போய்க்கொண்டிருந்த ஸ்ரீராமானுஜரை அழைத்து, 'ஜீயா! இந்தாரும். பெருமாள் தீர்த்தம். பிரஸாதப்படும்!' என்று கூறினான். ஜீயரும், 'நாயந்தே!' என்று கூறியவாறு மேல்துணியை இடுப்பில்

கட்டி பவ்யமாக அதை வாங்கிக்கொண்டார். ஒரு சமயம் ஸ்ரீரங்கத்துத் தெருக்களில் 'ஸர்வக்ஞ பட்டன் வந்தார்! வாதிகளுக்கு சிம்மம் வந்தார்!' என்று விருது ஒலிக்க வந்த பல்லக்கு வித்வானிடம் சென்று, ஒரு சிறுவன் (பராசர பட்டர்), 'வித்வானே! இதோ என்னிரு கைகளில் எவ்வளவு மணல் என்பதை அறிவீரா?' என்று கேட்டான். வித்வானோ, 'எப்படியப்பா சொல்லமுடியும்? மணலை எண்ண முடியுமோ?' என்று கூற, சிறுவன், 'இரண்டு கைப்பிடி மணல் என்று சொல்ல அறியாத நீர் எப்படி ஸர்வக்ஞ பட்டன் என்று விருது ஊதி வருகிறீர், மிகப்பெரிய வித்வான்கள் எல்லாம் பக்தியின் மேலீட்டால் அடக்கமே உருவாக வாழும் இந்தப் புண்ணியத் தலத்தில்?' என்று கேட்டுவிட்டான். அதற்கு அந்த வித்வான் அதிர்ந்து பேராச்சரியம் உற்று, அவனைத் தன் சிவிகைமீதேற்றிச் சென்று அவன் இல்லத்தில் விட்டுவிட்டுப் போனார். பிரெஞ்சுப் படைகள் பண்ணும் உபத்திரவம் ஒரு பக்கம். அதே நேரத்தில் (கி.பி. 1772) பங்குனி ஹஸ்த நக்ஷத்திரத்தில் ஸ்ரீரங்க நாச்சியார் ஸந்நிதி முன்பு அமைந்துள்ள கம்பர் மண்டபத்தில் அருணாச்சலக் கவிராயருடைய இராம நாடகக் கீர்த்தனைகள் அரங்கேற்றம் ஆயின. கம்பர் சடகோபர் அந்தாதி பாடிய பின்னர் கம்ப ராமாயணம் அரங்கேறியதும் பண்டைக்காலத்தில் இந்த மண்டபத்தில்தான். ஸ்ரீரங்கத்தைப் பற்றி எழுதி முடியாது. வேறு என்ன சொல்லமுடியும்? நாட்டினான் தெய்வமெங்கும் நல்லதோர் அருள் தன்னாலே, காட்டினான் திருவரங்கம் உய்பவர்க்கு உய்யும் வண்ணம்'

ஸ்ரீராமனுடைய தென்திசைப் பயணத்தால் ஸ்ரீவைஷ்ணவம் தழைத்தது. இலங்கை அரசன் விபீஷணன் ஸ்ரீராமனின் முடிசூட்டுவிழாவிற்குச் சென்று தனக்களிக்கப்பட்ட பரிசாகக் கொண்டுவந்தது ஸ்ரீரங்கம் என்னும் விமானம். ஸ்ரீரங்கம் என்னும் விமானத்தை மையமாக வைத்து வழிபாட்டுமுறைகளைப் பரப்பியவர்கள் இக்ஷ்வாகு வம்சத்து அரசர்கள் என்று கொள்வதற்கான சான்றுகளை நாம் ஸ்ரீராமாயணத்தில் காணலாம். ஸ்ரீராமனை ஸ்ரீவைஷ்ணவ உலகம் 'பெருமாள்' என்ற பெயரால் குறிப்பிடுகிறது. ஸ்ரீரங்க விமானத்தில் பெருமாளால் வழிபடப்பட்ட ஸ்ரீரங்கநாதன் 'பெரிய பெருமாள்' என்ற பெயரால் அழைக்கப்படுகிறார். இங்கு மக்களால் தெய்வம் என்று கொண்டாடப்பட்ட ஓரரசனால் பெருந்தெய்வம் என்று வணங்கிக் காட்டப்பட்டமையைப் 'பெரிய' என்ற அடைமொழி சுட்டுகிறது. அரசனின் அரண்மனை கோயில் என்றால், அரங்கனின் விமானம் 'பெரிய கோயில்'. அரங்கனின் சக்தியான ஸ்ரீதேவிக்குப் 'பெரிய பிராட்டியார்' என்று பெயர். பெருமாளின் துணைவியாரான சீதைக்குச் 'சீதாப்பிராட்டியார்' என்று பெயர். அரசனாகிய பெருமாளின் நெருக்கமான தொண்டரான அனுமானுக்குத் 'திருவடி' என்று பெயர் என்றால் அரங்கனின் அணுக்கத் தொண்டரான கருடனுக்குப் 'பெரிய திருவடி' என்று பெயர். அரசனால் காட்டப்பட்ட கடவுள் என்பதற்கேற்ப அரங்கனுடைய கோயிலில் வழிபாட்டு முறைகள் 'ராஜவத் மரியாதை' என்ற பொதுவான போக்கினை உடையன. அதாவது ஓர் அரசனின் அரண்மனையில் எந்தவித அணுகுமுறையும், நெறிகளும் பின்பற்றப் படுமோ அந்த அடிப்படையில் அமைந்த வழிபாட்டுமுறையே அரங்கனின் கோயிலில் பின்பற்றப் படுகிறது. இந்த வழிபாட்டுமுறைகளுக்கான விளக்கங்களைப் 'பாரமேஸ்வர ஸம்ஹிதை', 'பாத்ம ஸம்ஹிதை' முதலிய வைஷ்ணவ ஆகமங்களில் காணலாம்.

விபீஷணன் காலத்தில் இருந்த சோழ மன்னன் இந்தத் தர்ம வர்மா என்றும், இக்ஷ்வாகு வம்சத்தைச் சேர்ந்தவர்கள் சோழர்கள் என்றும் புராணங்கள் கூறுகின்றன. இதைப் பற்றிய வரலாற்று ரீதியான தெளிவுகள் ஏற்படவில்லை. இந்தத் தர்ம வர்மா காலத்திற்குப் பின் சில காலம் இரண்டாற்றுக்கு நடுப்பட்ட கோயில் ஆற்றுவெள்ளத்தின்

மிகுதியினால் மண்மூடிக் கிடந்ததென்றும், மக்கள் நினைவிலிருந்து மறைந்துவிட்ட கோயிலைக் கிளி காட்டிய குறிப்புகளைக்கொண்டு தர்ம வர்மாவின் வழிவந்த கிளிச்சோழன் கண்டுபிடித்து மீண்டும் நிலைநிறுத்தினான் என்றும் கோயிலொழுகு முதலிய நூல்கள் தெரிவிக்கின்றன. இதன் நினைவாகத்தான் கிளி மண்டபம் கட்டியதாகக் கூறுவர்.

கோயில் ஒன்றிற்கு ஸ்தல விசேஷம், மூர்த்தி விசேஷம், தீர்த்த விசேஷம் என்றபடி மூவிதச் சிறப்புகளைக் கூறுவர். இதில் ஏதேனும் ஒன்று அமைந்தாலே சிறப்பு. மூன்றும் சேர்ந்து அமைந்த கோயில் ஸ்ரீரங்கம். மூர்த்தி என்பது தானே உண்டானது, ரிஷிகளால் ஏற்படுத்தப்பட்டது, சித்தர்களால் உண்டானது, மனிதர்களால் அமைக்கப்பட்டது என்றபடி நான்கு வகைகள் கொண்டது. இதில் ஸ்ரீரங்கம் தானே உண்டான வகையைச் சேர்ந்த மூர்த்தியை உடையது. ஸ்தலமாகிய இடம் ஏற்கனவே சிறப்பு பெற்ற சேஷ பீடம் என்ற சிறப்புடையது. தீர்த்தமாகிய நீர்நிலை புண்ணிய நதிகளில் சிறந்ததான காவேரி.

மேலும் ஆகமக் கருத்துகளும், யோகக் கருத்துகளும் கலந்து ஸ்ரீரங்கம் கோயிலின் நிர்மாணத்தில் திகழ்கின்றன. எவ்வாறெனில், ஆலயத்தை ஸாதனாலயம் (புறக்கோயில்), ஸாத்யாலயம் (உடல்) என்று இருவகையாகப் பிரிப்பர். யோகத்தால் உடலில் இறைவனை வழிபட புறக்கோயில் துணைசெய்வதாகக் கூறுவர். புறக்கோயிலும் உடலின் விளக்கமாகவும், இதயத்தின் விளக்கமாகவும் அமைவதற்கேற்ப இருவகைப் படுவது. இதில் ஸ்ரீரங்கம் ஆகிய ஸாதனாலயம் உடல் விளக்கமாக அமைந்ததென்பர். மேலும் ஆகமங்களில் ஸ்ரீவைகுண்டம் எப்படி இருக்கும் என்று வர்ணிக்கப்பட்டிருப்பதைப் போலவே அமைந்து இருப்பது ஸ்ரீரங்கம். எனவேதான் இதற்கு பூலோக வைகுண்டம் என்றும் பெயராயிற்று என்பர். உடல் விளக்கமாக அமைந்த கோயில்கள் தலையின் இடத்தில் கர்ப்பக்ருஹத்தையும், முகத்தின் இடத்தில் அந்தராளத்தையும், கழுத்தின் இடத்தில் சுகநாசி என்ற அமைப்பையும், தோள்களின் இடத்தில் அர்த்தமண்டபத்தையும், வயிற்றின் இடத்தில் மஹாமண்டபத்தையும், கால்களின் இடத்தில் பிராகாரங்களையும், பாதங்களின் இடத்தில் கோபுரத்தையும் கொண்டு விளங்கும் என்று சொல்லப்படுகிறது. மேலும் யோகக் கருத்துகளுக்கு ஏற்ப கர்ப்பக்ருஹம், அர்த்தமண்டபம், மஹாமண்டபம் முதலியவை மூலாதாரம், மணிபூரகம், ஸ்வாதிஷ்டானம், அனாஹதம், விசுத்தி, ஆக்ஞா ஆகிய ஆறு ஆதாரச் சக்கரங்களைக் குறிப்பதாகவும், ஆயிரக்கால் மண்டபம் ஸஹஸ்ராார சக்ரத்தைக் குறிப்பதாகவும், சந்திர புஷ்கரணி அம்ருத தாரையைக் குறிப்பதென்றும் கூறுவர்.

ஆரம்ப காலத்தில் தர்ம வர்மா திருச்சுற்றுவரையில்தான் கோயில் இருந்திருக்கவேண்டும். அதற்குப்பின் அமைந்துள்ள சுற்றுகள் காலத்தின் அளவுகோல்போன்று வரலாற்றுப் படிவுகளாய் சூழ்ந்திருக்கின்றன. முதல் சுற்றான தர்ம வர்மா திருச்சுற்றைச் சூழ்ந்து ராஜ மஹேந்த்ரன்(கி.பி. 1058 எ 1062) திருச்சுற்று. அதைச் சூழ்ந்த மூன்றாவது பிராகாரம் குலசேகர ஆழ்வார் பெயரால் விளங்கும் குலசேகரன் திருச்சுற்று. நான்காவது திருமங்கை ஆழ்வார் திருப்பணிகள் செய்த ஆலிநாடன் திருச்சுற்று. ஐந்தாவது சுற்றாகச் சூழ்ந்திருப்பது விக்கிரம சோழனான அகளங்கன் (கி.பி.1120) திருச்சுற்று. ஆறாம் திருச்சுற்றாகச் சூழ்ந்திருப்பது திருவிக்கிரமன் திருவீதி. ஏழாம் திருச்சுற்று கலியுகராமன் என்னும் வீரபாண்டியன் (கி.பி.1297 எ 1342) திருச்சுற்று. இவையெல்லாம் அந்தந்தக் காலத்தில் திருப்பணி செய்தோர் பெயரால் விளங்கும் திருவீதிகள். உட்சதுரங்களைச் சூழ்ந்த

வெளிச் சதுரங்களாய் சூழ்ந்திருப்பவை. இவையும் தவிர திருச்சுற்றுகளில் பலப்பல மண்டபங்களும், அரங்கனுக்குப் பலப்பல ஆபரணங்களும் திருப்பணி செய்த மன்னர்களும், அதிகாரிகளும், படைத்தலைவர்களும், செல்வந்தர்களும் மிகப்பலர். முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன்(கி.பி.1250) ஒருசமயம் அரங்கனின் திருவாராதனம் (படையல்) கண்டு ஸேவித்துக்கொண்டிருக்கும்பொழுது அரங்கனின் வழிபாட்டில் பயன்படுத்தப்படும் நீரை பெய்துவைப்பதற்கான திருப்படிக்கத்தை அர்ச்சகர்கள் எடுத்துவைக்க மறந்ததன் காரணமாகத் திகைத்து நின்றார்கள். ஸேவித்துக்கொண்டிருந்த சுந்தரபாண்டியன் சிறிதும் தயங்காது தன் ராஜக் கிரீடத்தை நீட்டி அந்தப் புண்ணிய நீரை ஏந்தினான். அனைத்து மக்களும் நெகிழ்ந்து நின்ற அந்தச் சம்பவத்தைக் குறிக்க இன்றும் அவ்வாறு திருப்படிக்கத்தில் வழிபாட்டு நீரை ஏந்தும்போது ‘சுந்தர பாண்டியம் பிடித்தேல்’ என்றே அருளப்பாடு நடக்கிறது.



ஸ்ரீரங்கம்’ என்பது முதலில் விமானத்திற்குத்தான் பெயர். பிறகுதான் இடத்தின் பெயராக ஆகிவருகிறது. ‘ஸ்ரீரங்கம்’ என்ற விமானம் அங்கு வருவதற்குமுன், இரண்டாற்று நடுவே விளங்கும் திடராக இருந்த இடத்திற்குப் பெயர் ‘அநந்த பீடம்’ என்பது. அநந்த சய்யை, அநந்த சயனம், சேஷ சயனம், சேஷ பீடம் என்ற பெயர்களாலும் அழைக்கப்பட்டது. அப்பொழுது சந்திர புஷ்கரணி என்ற குளமும், அதன் கரையில் அமைந்த புன்னை மரமும் பல புராணக் கதைகளுக்கு மையமாகத் திகழ்கின்றன. இந்த இடத்தைச் சுற்றி ‘எட்டு தீர்த்தங்கள்’, புனித நீர்நிலைகளாய், திருவெள்ளறை முதலியவை, பல முனிவர்களும், யோகிகளும் தவம் செய்யும் இடங்களாய் இருந்திருக்கின்றன. முனிவர்களும், தர்ம வர்மா என்ற அரசனும் வேண்டிக் கேட்டுக்கொண்டதற்கேற்பவும், தெய்வத்தின் விருப்பமும் அதற்கிசைந்ததாகத் தோன்றிய குறிப்புகளினாலும் விபீஷணன் தான் கொண்டுவந்த விமானத்தை ‘அநந்த பீடத்திலேயே’ கோயில்கொள்ளச் செய்துவிட்டான். இன்றும், ஊரடங்கிய பின், நள்ளிரவு கடந்த யாமத்தில் விபீஷணன் வந்து வணங்கிவிட்டுச் செல்வதாக நம்பிக்கை நிலவுகிறது.

‘விரிதிரைக் காவிரி வியன்பெருந் துருத்தித் திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்’ என்று சிலப்பதிகாரம் ஸ்ரீரங்கத்தைக் குறிப்பிடுகிறது. ஆகமக் கருத்துகளையும், யோகக் கருத்துகளையும் உட்கொண்டு, இதிகாஸ புராணக் கருத்துகளை மக்களுக்குத் தெரிவிப்பதாகவும், தமிழில் அருளாளர்கள் தங்கள் இறையனுபவங்களை வெளியிடும் பிரபந்தங்களைப் போற்றுவதாகவும் மிகப் பழங்காலம் தொட்டே ஸ்ரீரங்கம் செயல்பட்டு

வந்துகொண்டிருப்பதை இதிலிருந்து நாம் புரிந்துகொள்ளமுடியும். அதுமட்டுமின்றி துவக்கமுதற்கொண்டே வடக்கையும், தெற்கையும் இணைக்கும் ஆன்மிகப் பண்பாட்டுப் பாலமாகவும், எவ்வகைச் சிறப்பையும் எத்திக்கினின்றும் கொணர்ந்து தமிழாக்கும் அருள் வல்லமை திகழும் கேந்திரமாகவும் திகழ்வது ஸ்ரீரங்கம். நூற்றியெட்டுக் கோயில்களிலும் தலைமைக் கோயிலாகத் திகழும் ஸ்ரீரங்கத்தின் வளம் பெருகட்டும், ஸ்ரீரங்கம் நன்கு காப்பாற்றப்படட்டும் என்ற வாழ்த்துக் கூறியே மற்றைய கோயில்கள் அனைத்தும் திறந்து மூடப்படுகின்றன என்பது இன்றும் நடைமுறையில் உள்ள ஒன்று. 'ஸ்ரீரங்க ச்ரியம் பத்ரவாம் அநுதினம் ஸம்வர்த்தய' என்பது அந்த வாழ்த்து. இத்தகைய சிறப்புகள் வாய்ந்த கோயிலானது, ஆழ்வார்கள் காலம் தொடங்கி இன்று வரையில், எப்படி மக்களின் வழிபாடு, சமுதாயம், கலை ஊக்கங்கள், அனுபவங்களாலான மதிப்பீடுகள் முதலியவற்றில் இரண்டறக் கலந்து மேன்மை துலங்க விளங்குகிறது என்பதைச் சில செய்திகளின் மூலம் இந்தக் கட்டுரையில் காட்டமுயல்வோம்.

பரம், வியூஹம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை என்று திருமாலின் தத்துவ நிலைகளைக் கூறுகிறது ஆகமம். மனம், வாக்கு கடந்த நிலை, படைப்பதற்கும், காப்பதற்காக அவதாரம் எடுக்க வேண்டியும் திருப்பாற்கடலில் பள்ளிகொண்ட நிலை, மண்ணுலகில் தோன்றிய அவதார நிலை, உடலில் உயிர்க்குயிராய் விளங்கும் நிலை, கோயில்களில் மூர்த்தியாக இருக்கும் நிலை என்று இவற்றை முறையே கூறலாம். 'அன்று கருவரங்கத்துள் கிடந்து கைதொழுதேன் கண்டேன் திருவரங்கமேயான் திசை' என்று கூறுகிறார் முதல் ஆழ்வாரான பொய்கையாழ்வார். அவரே 'வெள்ளத்தினுள்ளானும், வேங்கடத்து மேயானும் உள்ளத்தினுள்ளான் என்று ஓர்' என்று ஆகமக் கருத்தமையப் பாடுகிறார். பர நிலை மனம் வாக்குக்கு எட்டாதது; வியூஹம் எட்டா நிலத்தில் இருப்பது; விபவம் ஏதோ ஒரு காலத்தில் அவதாரம் எடுத்துப் போய்விட்ட ஒன்று; அந்தர்யாமி தீவிரமான யோக சாதனையின் மூலம் சில யோகிகளுக்கே வாய்ப்பது; கோயிலில் கோலம்கொண்ட அர்ச்சை ஒன்றுதான் எக்காலத்தவர்க்கும், எத்தேசத்தவர்க்கும், என்றும் நின்று அருள் செய்வது என்ற கருத்துடையவர்கள் ஆழ்வார்கள். 'பின்னானார் வணங்கும் சோதி' என்று அரங்கனைக் கொண்டாடுபவர்கள். பொய்கையார், பூதத்தார், பேயார், திருமழிசையார், நம்மாழ்வார், மதுரகவி, குலசேகரன், பெரியாழ்வார், ஆண்டாள், தொண்டரடிப்பொடி, திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார் என்ற அடைவில் வந்துதித்த பன்னிருவர் பாடிப் பரவியது ஸ்ரீரங்கம். தம் மகளான ஆண்டாளை அரங்கனுக்கே தந்து அவனை மருமகனாகக் கொண்டவர் பெரியாழ்வார். அரங்கனுக்கே பித்தனானவர் குலசேகரன். அரங்கனைத் தவிர மற்றவரைப் பாடமாட்டேன் என்றிருந்தவர் தொண்டரடிப்பொடி. அரங்கனின் அடிதொட்டு முடிவரைக் கண்டு தம்மை இழந்து பாடி அதிலேயே அமிழ்ந்து போனவர் திருப்பாணன். அரங்கன் திருப்பணிக்காக எதையும் செய்யத் துணிந்து, அவன் திருப்பணியே தம் வாழ்வாய்த் தோய்ந்து அங்கேயே வாழ்ந்தவர் திருமங்கை மன்னன் என்னும் நற்கலியன். 'நம்மாழ்வாருடைய ஆயிரம் திருவாய்மொழியும் அரங்கனுக்கே தந்தது, பின்னர் மற்ற கோயில்களுக்கும் அதிலிருந்து பிரித்துத் தந்தது' என்று நயம்பட உரைப்பார் பராசர பட்டர் என்னும் ஆசாரியர். 'திருவரங்கத் திருப்பதியே இருப்பாகப் பெற்றோம்' என்பதே பக்த உள்ளங்களில் மண்டியெழும் அவா. அளக்கின்ற நெல்லுக்கும் முதல் அளவை 'திருவரங்கம் பெரிய கோயில்' என்றே அளக்கும் தமிழ் செய்த வேளாண்மை. பிறவியும் வேண்டாம், பரம பதமும் வேண்டாம், மீண்டும் மீண்டும் ஸ்ரீரங்கத்திலேயே பிறந்துகொண்டிருத்தல் போதுமானது என்கிறார் தொண்டரடிப்பொடி. 'நம்பெருமாள் ஆகிய ஸ்ரீரங்கநாதனின் முகத்தில் உள்ள குளிர்த்தி போன்று பரமபத நாதனின் முகம் இல்லையெனில் அண்டச் சுவரை

முறித்துக்கொண்டு கீழே குதித்துவிடுவேன்' என்று கூறுகிறார் ஆளவந்தார் (ஸ்ரீராமானுஜரின் குரு) மகனாகிய சொட்டை நம்பி, தம்முடைய இறுதி நெருங்கும் காலத்தில்.

ஆகமத்தின் விளக்கமாய்த் திகழும் வைணவத்தில் திருமால் திறத்து எழும் தீவிர பக்தியும் முதல் படி என்ற அளவில்தான் கருதப்படும். அரங்கனுடைய அடியார்பால் கொள்ளும் பக்தியே அதைவிடச் சிறந்த அடுத்த படியாகக் கொள்ளப்படும். மாலை வழிபறித்து மந்திரம் கொண்ட திருமங்கை ஆழ்வார், தாம் 'திருவெட்டெழுத்தும் கற்று உற்றதும் அவன் அடியார்க்கடிமை' என்று கூறுகிறார். நாராயண நாமத்தைக் கற்பதன் பலன் திருமால் அடியார்கள்பால் கொள்ளும் பக்தியாகிற பாகவத சேஷத்வம் என்பது ஆழ்வார் எண்ணம். அவருடைய பிரபந்தங்களில் மிகச் சிறந்தது திருநெடுந்தாண்டகம் என்பது. அதை ஆழ்வார் அரங்கன் முன்னர் பாடிக்காட்டியபொழுது பாடலின் இனிமையில் தோய்ந்த அரங்கன் 'ஆழ்வீர்! உமக்கு விருப்பமானதைக் கேளுங்கள். தருகிறேன்' என்று அருளப்பாடு இட்டானாம். அதற்கு ஆழ்வார் 'மார்கழி மாதம் சுக்லபக்ஷ ஏகாதசியின் போது வரும் அத்யயன உற்சவத்தில் (அத்யயனம் - படிப்பு) வேதங்களைச் செவிசாய்ப்பதுபோல் தேவரீர் நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழியையும் கேட்டருள வேண்டும்' என்று வேண்டிக்கொண்டாராம். அதன் காரணமாகவே வடமொழி வேதத்தோடு ஒக்க திராவிட வேதத்தையும் இசையமைத்து ஓதுவது என்ற வழக்கம் ஏற்பட்டது. அதுமட்டுமின்றி திருவீதி உலாக்களின் போது முன்னால் தமிழ் வேதம் முழங்கிச் செல்ல, அரங்கன் பின்செல்லுவதும், அவனைத் தொடர்ந்து வடமொழி வேதங்கள், 'வாக்கிற்கும் மனத்திற்கும் எட்டாதவன் பரம்பொருள்' என்று ஓதிக்கொண்டே செல்வதையும் இன்றளவும் காணலாம். இதைக் கண்ணுற்ற கம்பர், சடகோபர் அந்தாதியில் 'தமிழ்ப்பின் சென்ற பெருமாள்' என்று கொண்டாடுகிறார்.

நாம் இங்கே அருளப்பாடு என்ற சொல்லைப் பார்த்தோம். 'அருளப்பாடு' என்றால் என்ன என்ற கேள்வி எழுகிறதல்லவா? ஸ்ரீரங்கத்தின் சிறப்புகளின் வரலாற்றில் அதுவும் ஒன்று. தெய்வம் பேசுமா? விக்ரகம் பேசுமா? அர்ச்சகர்களிடத்தில் ஆவேசமாக வந்து சாமியாடிப் பேசுவதை இந்த 'அருளப்பாடு' என்பது குறிக்கிறது. மூர்த்தியின் அண்மையிலேயே எப்பொழுதும் இருப்பதால் அர்ச்சகர்களின் சொல்லும் செயலும் மூர்த்தியைப் பற்றிய கவனமாகவே ஆகி அவர்கள் தம் வசம் இழந்து உரைக்கும் சொல் ஆண்டவன் சொல்லாகவே கொள்ளப்பட்டு வந்ததை இது குறிக்கிறது. ஸ்ரீரங்கத்தின் வைணவ வரலாற்றில் முக்கியமான திருப்பங்களையும், முடிவுகளையும் இந்த 'அருளப்பாடு' என்ற வழக்கம் நிகழ்த்தியிருக்கிறது. இது சற்று மாறி இக்காலத்தில் கைங்கரியம் செய்யும் ஊழியர்களை, தொண்டர்களை, கடவுள் விளிப்பதான பாவனையில் 'அருளப்பாடு வேதவிண்ணப்பம்' என்பது போன்று அதற்குரிய கைங்கரியபரர் இறைந்து கூப்பிடுவதும், விளிக்கப்படுவோர் 'நாயிந்தே, நாயிந்தே' என்று கூறிக்கொண்டு விரைந்துவருவதும் இன்றும் நாம் காணக்கூடிய காட்சி. 'நாயிந்தே' என்பது தொண்டர்கள் அரச அவையில் கூறியபடியே ஓடியாடி வேலை செய்வதன் பிரதியாக இருக்கலாம். எனக்குத் தோன்றுகிற கருத்து என்னவெனில் எ நாராயண நாமம் விளங்கும் அஷ்டாக்ஷர மந்த்ரத்தில் 'நம:' என்னும் பதம் மிக முக்கியமானது என்பர். என்னவெனில், ஜீவனின் இறைவனுடனான தொடர்பை முற்றும் விலக்கிக் கொள்ளும் எண்ணமான 'நான் எனக்கே சொந்தமானவன் வேறு எவருக்கும் இல்லை' 'ம:' என்பதை 'ந' என்ற எதிர்ப்பதத்தால் அகற்றி முக்திக்கு மிக முக்கியமான தடையை விலக்குகிறது. அவ்வாறு விலக்கி 'நம:' என்பதால் 'நான் எனக்கு உரியவன்

இல்லை' இறைவனுக்கே உரியவன் என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கிறது என்பர் ஆசாரியர்கள். எனவே இறைவனின் அருளப்பாடு வரும்பொழுது தொண்டர்கள் 'நானில்லை நீயே' என்று கூறியவாறே பணிக்குத் தம்மை உடன்படுத்திக்கொள்ளுதல் இயல்பாம். எனவே 'நாஹம் தே' 'நான் எனக்கு உரியவன் இல்லை உனக்கே' என்று கூறியபடியே தொண்டில் ஈடுபடுதல் நாளடைவில் மாறி 'நாஹம்தே' என்பது 'நாயிந்தே' ஆகியிருக்கக்கூடும். அல்லது 'உனக்கே பணி செய்திருக்கும் தவமுடையேம்' என்ற ஆழ்வார் வாக்கிற்கேற்ப 'நாயன் தே' என்பது 'நாயிந்தே' ஆகியிருக்கலாம்.

திருமங்கை மன்னன் வேண்டுகோளுக்கு ஏற்ப திருவாய்மொழி உற்சவம் ஏற்பட்டது மட்டுமல்ல, ஆழ்வார் திருநகரியிலிருந்து நம்மாழ்வார் வந்து கலந்துகொள்ள அரங்கனிடமிருந்து அழைப்பு அனுப்பும் வழக்கமும், அதை ஏற்று நம்மாழ்வாரை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வருவதும் பலகாலம் நடந்து வந்திருக்கிறது. ஸ்ரீராமானுஜர் காலத்தில் பல இடர்ப்பாடுகளை மனத்தில் கொண்டு அந்த வழக்கம் நிறுத்தப்பட்டுக் கருடன் சந்நிதிக்குப் பக்கத்திலேயே நம்மாழ்வாருக்கும் சந்நிதி அமைக்கப்பட்டது. இன்றும் அழைப்பு எழுதும் வழக்கம் திருக்கார்த்திகை அன்று நடைபெறுகிறது. திருமங்கை ஆழ்வாரால் ஏற்படுத்தப்பட்ட இந்தத் தமிழ்த் திருநாள், நாதமுனிகளால் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு, ஸ்ரீராமானுஜரால் மிக விமரிசையான முறையில் நிறுவப்பட்டிருக்கும் ஒன்றாகும். இக்ஷ்வாகு மன்னன் வழிபட்ட உற்சவ நாளாகிய பங்குனி உத்திரம் ஆதிபிரம்மோற்ஸவம் என்ற பெயரில் விடாது இன்றும் கொண்டாடப்படுகிறது. இதற்கே 'பெரிய திருநாள்' என்று பெயர்.

ஆழ்வார்களின் காலத்திற்குப் பின்னர் அவர்கள் பாடிய திவ்ய பிரபந்தங்கள் காலத்தில் மறைந்துவிட, நாதமுனிகள் என்னும் ஸ்ரீவைஷ்ணவ யோகியாரால் அவை மீண்டும் தேடிக்கண்டெடுக்கப்பட்டு, தேவகானம் என்ற இசை முறையில் அமைத்து ஸ்ரீரங்கத்தில் திரு அத்யயன உற்சவத்தின்போது ஓதும் முறை மீண்டும் ஏற்படுத்தப்பட்டது. அப்பொழுதுதான் திருவாய்மொழி உற்சவத்தை ஏற்படுத்திய திருமங்கை ஆழ்வாரின் பெரியதிருமொழியையும், மற்றைய ஆழ்வார்களின் பிரபந்தங்களையும் அரங்கன் முன்னர் ஓதும் திருமொழித் திருநாள் ஏற்படுத்தப்பட்டது. பகல்பத்து திருமொழித்திருநாளாகவும், இராப்பத்து திருவாய்மொழித் திருநாளாகவும் எற்பாடு ஆகியது. அதாவது ஏகாதசிக்கு முன்னர் பத்து நாள் பகல் பத்து. ஏகாதசி அன்று இறைவனே முக்திக்காக முயலும் ஜீவனாக நடித்துக் காண்பிக்கும் பரமபத வாசல் திறப்பு உற்சவம் நடைபெறுகிறது. அரங்கனோடு சேர்ந்து

முக்தி வாசலில் நுழையும் விழைவோடு இன்றும் பக்தத் திரள் கூடுவதைக் காணலாம். திருவாய்மொழியின் நிறைவு நாளன்று நம்மாழ்வார் பரம பதம் அடைகின்ற காட்சி நள்ளிரவின் பின்யாமத்தில் துவங்கிப் பொழுது புலரும்போது நிறைவு பெறும். அதுகால் உலக நன்மையை முன்னிட்டும், மனிதர்களின் உயர்வை முன்னிட்டும், 'ஆண்டவனை அடைதல் முதல் நிலை, அடியார் குழாங்களைக் கூடுதல் முடிந்த நிலை' என்னும் ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்தத்தின் முடிந்த முடிபான கருத்தை விளக்குவது போன்றும், பக்தர்களின் வேண்டுதலைச் செவிசாய்த்து அரங்கனும் தன் சிறப்புகளெல்லாம் அணிவித்து ஆழ்வாரை அரையர்களிடம் மீண்டும் தருவதும் கருத்தாழம் மிக்க உற்சவங்களாக இன்றும் நடை பெறுகின்றன. முக்தி தரும் இறைவன் முக்திக்காக ஏங்கும் ஜீவனாக நடித்துக் காட்டுவதும், முக்தி பெற்ற அடியவர், பக்த குழாங்களை விட்டுப் பிரிய மனமில்லாததுபோல் மீண்டும் வருவதாக நடத்தப்படும் வழிமுறைகளும் ஸ்ரீரங்கத்திலன்றி வேறு எங்கு நாம் சிறப்புறக் காணப்பெறுவோம்?

நாதமுனிகளுடைய பேரரான ஆளவந்தார் என்னும் யாமுனரே ஸ்ரீராமானுஜரின் மானத குருவானவர். நாதமுனிகள் காலம் வரையில் ஆகமம், வேதம் என்ற சான்றுகளைக் கொண்டிருந்தாலும் ஸ்ரீவைஷ்ணவ மதம் பாஞ்சராத்திர மதமாகவே பெரும்பான்மையும் கருதப்பட்டு வந்தது. பாஞ்சராத்திரத்தின் கொள்கைகள் வேதத்திற்கு விரோதம் என்ற எண்ணமும் சிலரிடையே நிலவியது. ஆதிசங்கரரும் தம்முடைய வேதாந்த விரிவுரையில் பாஞ்சராத்திரத்தின் 'நாராயணனே பரம்பொருள்' என்ற கொள்கை வேதத்திற்கு இசைந்தது என்று ஏற்றுக்கொண்டு, அதன் வியூஹம் பற்றிய கருத்துகள் தேவையற்றன என்று எழுதியிருந்தார். இந்தச் சூழ்நிலையில் ஆகமம் வேதத்திற்கு உடன்பாடானதுதான் என்று நிரூபிக்க வேண்டிய கட்டாயம் எழுந்ததால், ஆளவந்தார் 'ஆகம ப்ராமாண்யம்' முதலி

நூல்களை எழுதினார். ஆனால் வேதாந்த ஸூத்ரங்களுக்கு விரிவுரையாக எழுதி இந்தக் கருத்துக்களை நிரூபித்துக்காட்டினால்தான் சமயதத்துவ வல்லுநர்களின் உலகம் அன்று எதையும் ஏற்றுக்கொள்ளும். அந்தப் பெரும்பணியைச் செய்வதற்குப் தகுந்த திறமை படைத்தவராக ஸ்ரீராமானுஜரைத் தான் ஆளவந்தார் கருதியிருந்தார். நேரடியாக சந்திக்கும் முன்பே தம் காலம் முடிந்துவிட்டபடியால் தம் சீடர்களிடம் ஸ்ரீராமானுஜரை வழிசெலுத்தி உறுதுணையாக இருக்கும் பொறுப்பைத் தந்து சென்றார். ஸ்ரீராமானுஜர் இந்த அரும்பணியைச் செய்யும்பொழுது, ஆகமக் கருத்தும் வேதாந்தக் கருத்தும் ஒன்றே என்று நிறுவ முற்படும்போதெல்லாம், ஆழ்வார்களின் பாடல்கள் மிகுந்த விளக்கத்தைத் தரும் நல்லுதவிகளாய் இருந்தமையைப் பல்கால் வியந்திருக்கிறார். அதன் விளைவாக ஆழ்வார்களின் பிரபந்தக்களுக்கும் நல்ல விரிவுரைகள் எழுதச் செய்யவேண்டும் என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது. அதனால் விளைந்த நற்பயன்தான் அவர்காலம் துவங்கி சுமார் இருநூறு ஆண்டுகளாய் ஏற்பட்ட, 'பகவத் விஷயம்' என்னும், தமிழ்வேதத்திற்கான இருமொழி விரவிய நடையில் எழுதப்பட்ட உரைக்கோவைகள். அந்த உரைக் கோவைகளில் கோயிலில் அன்றாடம் நடந்த பல நிகழ்ச்சிகள் உதாரணங்களாகவும், ஐதீகங்களாகவும் எடுத்துக்காட்டப்படுகின்றன.

'விழாக் கோலம் அன்றி வேறு கோலம் அறியாத திருவரங்கம்' என்று சொல்லும் வார்த்தை மெய் என்பதை இன்றும் நாம் காணத்தக்கவாறு ஒவ்வொரு மாதமும் ஓர் உற்சவம் நடந்தவாறிருக்கிறது. சித்திரை மாதத்தில் சித்திரைத் தேர் பத்து நாட்கள் உற்சவம். இதற்கு அக்கம் பக்கம் கிராமத்தினின்றும் கள்ளங்கபடில்லாத உழவர் பெருமக்கள் 'கோவிந்தா' முழக்கத்துடன் ஊரெங்கும் நிறைவது கண்கொள்ளாக் காட்சியாகும். வைகாசியில் வஸந்தோத்ஸவம், இளவேனில் திருவிழா. ஆனிமாதத்தில் ஜ்யேஷ்டாபிஷேகம் என்னும் நீராட்டு விழா. ஆடிமாதத்தில் பதினெட்டாம் பெருக்கு, இருபத்தெட்டாம் பெருக்கு என்னும் காவிரி நீர்ப்பெருக்கை அரங்கன் கண்டு களிக்கும் விழா. மாலை வேளையில் சீர் வகையறாக்களை யானையின் மேல் ஏற்றிச் சென்று, திருமாலை, தாலிப்பொட்டு ஆகியவற்றை அரங்கன் காவிரிக்கு அளிக்கும் காட்சியும், பல்லக்கில் ஆண்டாள் சந்நிதிக்குச் சென்று மாலை மாற்றிக் கொள்வதும் கண்குளிரும் காட்சி. ஆவணி மாதத்தில் கிருஷ்ண ஜயந்தி, உறியடி. இதே மாதத்தில் பவித்திர மாலைகளைச் சூடிக்களையும் பவித்திர உத்ஸவம். புரட்டாசி மாதத்தில் பெரிய பிராட்டியார் என்னும் ஸ்ரீரங்க நாயகியாரின் நவராத்திரித் திருநாள். விஜயதசமி அன்று அரங்கனார் காட்டழகிய சிங்கர் தோப்பிற்குச் சென்று, வேட்டையாடு முகத்தான் வன்னி மரத்தில் அம்பெய்து, குதிரை வாகனத்தில் மீள்வது சிறப்பான காட்சி. ஐப்பசி மாதத்தில் ஊஞ்சல் திருநாள். ஊஞ்சலில் அரங்கன் வீற்றிருக்க அரையர் தாலாட்டு

பாடக் காணும் காட்சியும், திருக்கொட்டாரத்தில் நெல் அளப்பதை நேரில் இருந்து அரங்கன் காணும் காட்சியும், நம் வீட்டில் ஒருவராகவே

நூல்களை எழுதினார். ஆனால் வேதாந்த ஸூத்ரங்களுக்கு விரிவுரையாக எழுதி இந்தக் கருத்துக்களை நிரூபித்துக்காட்டினால்தான் சமயதத்துவ வல்லுநர்களின் உலகம் அன்று எதையும் ஏற்றுக்கொள்ளும். அந்தப் பெரும்பணியைச் செய்வதற்குப் தகுந்த திறமை படைத்தவராக ஸ்ரீராமானுஜரைத் தான் ஆளவந்தார் கருதியிருந்தார். நேரடியாக சந்திக்கும் முன்பே தம் காலம் முடிந்துவிட்டபடியால் தம் சீடர்களிடம் ஸ்ரீராமானுஜரை வழிசெலுத்தி உறுதுணையாக இருக்கும் பொறுப்பைத் தந்து சென்றார். ஸ்ரீராமானுஜர் இந்த அரும்பணியைச் செய்யும்பொழுது, ஆகமக் கருத்தும் வேதாந்தக் கருத்தும் ஒன்றே என்று நிறுவ முற்படும்போதெல்லாம், ஆழ்வார்களின் பாடல்கள் மிகுந்த விளக்கத்தைத் தரும் நல்லுதவிகளாய் இருந்தமையைப் பல்கால் வியந்திருக்கிறார். அதன் விளைவாக ஆழ்வார்களின் பிரபந்தக்களுக்கும் நல்ல விரிவுரைகள் எழுதச் செய்யவேண்டும் என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது. அதனால் விளைந்த நற்பயன்தான் அவர்காலம் துவங்கி சுமார் இருநூறு ஆண்டுகளாய் ஏற்பட்ட, 'பகவத் விஷயம்' என்னும், தமிழ்வேதத்திற்கான இருமொழி விரவிய நடையில் எழுதப்பட்ட உரைக்கோவைகள். அந்த உரைக் கோவைகளில் கோயிலில் அன்றாடம் நடந்த பல நிகழ்ச்சிகள் உதாரணங்களாகவும், ஐதீகங்களாகவும் எடுத்துக்காட்டப்படுகின்றன.

'விழாக் கோலம் அன்றி வேறு கோலம் அறியாத திருவரங்கம்' என்று சொல்லும் வார்த்தை மெய் என்பதை இன்றும் நாம் காணத்தக்கவாறு ஒவ்வொரு மாதமும் ஓர் உற்சவம் நடந்தவாறிருக்கிறது. சித்திரை மாதத்தில் சித்திரைத் தேர் பத்து நாட்கள் உற்சவம். இதற்கு அக்கம் பக்கம் கிராமத்தினின்றும் கள்ளங்கபடில்லாத உழவர் பெருமக்கள் 'கோவிந்தா' முழக்கத்துடன் ஊரெங்கும் நிறைவது கண்கொள்ளாக் காட்சியாகும். வைகாசியில் வஸந்தோத்ஸவம், இளவேனில் திருவிழா. ஆனிமாதத்தில் ஜ்யேஷ்டாபிஷேகம் என்னும் நீராட்டு விழா. ஆடிமாதத்தில் பதினெட்டாம் பெருக்கு, இருபத்தெட்டாம் பெருக்கு என்னும் காவிரி நீர்ப்பெருக்கை அரங்கன் கண்டு களிக்கும் விழா. மாலை வேளையில் சீர் வகையறாக்களை யானையின் மேல் ஏற்றிச் சென்று, திருமாலை, தாலிப்பொட்டு ஆகியவற்றை அரங்கன் காவிரிக்கு அளிக்கும் காட்சியும், பல்லக்கில் ஆண்டாள் சந்நிதிக்குச் சென்று மாலை மாற்றிக் கொள்வதும் கண்குளிரும் காட்சி. ஆவணி மாதத்தில் கிருஷ்ண ஜயந்தி, உறியடி. இதே மாதத்தில் பவித்திர மாலைகளைச் சூடிக்களையும் பவித்திர உத்ஸவம். புரட்டாசி மாதத்தில் பெரிய பிராட்டியார் என்னும் ஸ்ரீரங்க நாயகியாரின் நவராத்திரித் திருநாள். விஜயதசமி அன்று அரங்கனார் காட்டழகிய சிங்கர் தோப்பிற்குச் சென்று, வேட்டையாடு முகத்தான் வன்னி மரத்தில் அம்பெய்து, குதிரை வாகனத்தில் மீள்வது சிறப்பான காட்சி. ஐப்பசி மாதத்தில் ஊஞ்சல் திருநாள். ஊஞ்சலில் அரங்கன் வீற்றிருக்க அரையர் தாலாட்டு பாடக் காணும் காட்சியும், திருக்கொட்டாரத்தில் நெல் அளப்பதை நேரில் இருந்து அரங்கன் காணும் காட்சியும், நம் வீட்டில் ஒருவராகவே

அரசனுக்குரிய மரியாதையின் அடிப்படையில் நடக்கும் வழிபாடு என்று முன்னரே நாம் குறிப்பிட்டதற்கு இணங்க அரச அவையிலும், அரண்மனையிலும் நடமாடும் பரிபாஷையைப் போன்றே கோயிலிலும் தனியே பரிபாஷை என்பது உண்டு. உதாரணத்திற்கு 'பெரிய அவசரம்' என்று சொன்னால், அரங்கனுக்குப் பகல் உச்சிப்பொழுதில் படைக்கப்படும் பிரஸாதம். கொடியஞ்சு, செடியஞ்சு என்பவற்றோடு படைக்கப் பட்டது. கொடியஞ்சு என்றால் கொடிகளில்

காய்க்கும் அவரை, புடலை, பூசனி, பாகற்காய், வெள்ளரி என்ற ஐந்தும், செடியில் காய்க்கும் கொத்தவரை, வாழைக்காய் மற்றும் கிழங்குகள் சேர்ந்து செடியஞ்சு என்றும் பொருள்.